ரயிலை நிறுத்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்— :

(அ) அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் அண்மையில் ரயிலை போக விடாமல் தடுத்து நிறுத்தினார்களா ?

(இ) என்ன காரணத்திற்காக நிறுத்தினார்கள் ?

(உ) அவர்களுக்கு கல்லூரிக்கு உரிய காலத்தில் செல்லும் வகையில் ரயில் நேரத்தை மாற்றியமைக்கும்படி ரயில்வே போர்டாருக்கு சர்க்கார் எழுதுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) புகைவண்டிகள், அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேராமையாலும் அடிக்கடி காலந் தாழ்த்தி ஓடிக்கொண்டிருந்தமையாலும் வெளியூர்களிலிருந்து வரும் பல மாணவர்கள் இரவு நேரங்களில் தங்கள் வீடுகளுக்குத் தாமதமாகத் திரும்ப வேண்டியிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் மாணவர்கள் புகை வண்டிகளை தடுத்துத் நிறுத்த முனைந்தனர்.

(உ) தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ரயில்வே அதிகாரிகளுக்கு இது குறித்து முன்னமே கடிதம் எழுதியுள்ளார். அதை ரயில்வே அதிகாரிகள் முனைந்து ஆலோசித்து வருகிறார்கள்.

Aided Secondary Schools for girls in Thanjavur town area.

*** 216 Q**—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to st te—

(*a*) wheth r it is a fact that Seconday Grade Teachers in continuous service for over two years in Aid d Seconday Schools for Girls in Thanjavur Town area have been kept with out payment of salaries from the beginning of the academic year 1967–68 ;

(*b*) if so, the number of such teachers ; and

(*c*) the reasons therefor ?

தஞ்சாவூர் நகரப் பகுதியிலுள்ள மானியம் பெறும் பெண்கள் இடைநிலை பள்ளிகள்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் நகரப் பகுதியிலுள்ள மானியம் பெறும் பெண்கள் இடைநிலைப் பள்ளிகளில் இரண்டு ஆண்டுகட்கு மேல் தொடர்ந்து பணி புரிகின்ற இடைநிலை ஆசிரியர்கள் 1967-68-ம் கல்வி ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஊதியம் கொடுக்கப்படாமலிருக்கின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

THIRU G. KRISHNAMOORTHY : Is it a fact, Sir, that by calculating the teacher-pupil ratio as 1 : 55, certain secondary grade teachers in Thanjavur town were given notice ? Am I to understand that, these notices have been withdrawn and their salaries paid ?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Whether it is a fact that Secondary Grade Teachers in continuous service for over two years in Aided Secondary Schools for Girls in Thanjavur Town area have been kept without payment of salaries from the beginning of the academic year 1967–68.
என்ற கேள்விக்கு "இல்லை" என்றும், (இ), (உ) "கேள்விகளுக்கு இடமில்லை" என்றும் பதில் சொன்னேன். அப்படிப்பட்ட நிலைமையில்லை என்று சொன்னேன்.

Co-operative farms.

* 217 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) the number of co-operative farms in Madras State ;

(*b*) the number of farms dissolved ;

(*c*) the expenditure incurred by the Government on each farm ; and

(*d*) the profit gained and the loss sustained ?

கூட்டுறவுப் பண்ணைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழகத்தில் எத்தனை கூட்டுறவுப் பண்ணைகள் செயல்படுகின்றன ?

(இ) எத்தனை கலைக்கப்பட்டன ?

(உ) ஒவ்வொன்றுக்கும் சர்க்கார் செய்த செலவு என்ன ?

(எ) லாபம் எவ்வளவு ? நட்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) 251.

(இ) 19.

(உ) and (எ) ஒரு விவரப் பட்டியல் சட்டமன்றத்தில் வைக்கப்படும்.

திரு. என் ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, "இப்போது கூட்டுறவுப் பண்ணைகளிலே பெருவாரியான நஷ்டம் ஏற்படுகிறது ; லாபம் அற்றது வேண்டியதில்லை" என்று சொல்லப்படுகிறது. கூட்டுறவு லாபத்திற்காக அந்த ஏற்பாடு செய்வதால், லாபமும், நஷ்டமும் இல்லை என்றால் ஏன் அது இயங்கவேண்டும் ? இதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கூட்டுறவு இயக்கம் சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக ஏற்பட்ட இயக்கமாகும். அவைகள் நல்ல முறையில் நடைபெற என்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ அவைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இருக்கிற சொசைட்டிகளில் "Individual farming society" நல்ல முறையில் நடைபெறுகிறது. "Collective joint farming" சரியாக நடைபெறவில்லை என்று அரசாங்கம் முடிவிற்கு வந்து அதை மீண்டும் ஆரம்பிப்பதில்லை என்று இருக்கிறது. Individual society நல்ல முறையில் நடைபெற முயற்சிகள் எடுக்கும்படி ரிஜிஸ்டிராருக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : "Individual farming", "Collective farming" இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன ? இரண்டிற்கும் அரசாங்கம் என்னென்ன உதவி செய்கிறார்கள் ? "Collective farming" கலைக்க உத்தரவு போடக் காரணமென்ன ?